OS . 188/2021

பி. வா.சா. 1. திருமதி. கீதா க/பெ.வேலு

நாள்: 22.04.2026

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் சத்துணவு அமைப்பாளராக வேலை பார்க்கிறேன். நான் 12 ம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். எனக்கு எழுதப்படிக்க தெரியும். வாதி என்ன வழக்கு தாக்கல் செய்திருக்கிறார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். என்னுடைய நிரூபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வாதி என் மீது பாண்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். எவ்வளவு தொகைக்கான பாண்டு என்றால் தெரியாது. என்னுடைய பதில் வழக்குரையில் அந்த விவரம் சொல்லியிருக்கிறேனா என்றால் தெரியாது. எதற்காக நான் பணம் வாங்கினேன் என்றால் நான் பணம் எதுவும் வாங்கவில்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 1 -ல் உள்ள கையொப்பம் என்னுடையது தான். வா.சா.ஆ 1 -ல் உள்ள இரண்டு கையொப்பங்களும் என்னுடையதுதான். சாட்சி கையொப்பம் செய்துள்ள சுரேந்தர், மோகன் ஆகியோரை தெரியுமா என்றால் தெரியாது.

2. கடனுறுதிசீட்டை யார் எழுதினார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் வாதி வீட்டிற்கு வந்து ரூ.15,000/-த்தை வார வட்டிக்காக வாங்கினேன். சாட்சி எதிர் தரப்பு வழக்கறிஞரை நீங்கள் கேள்விக்கேட்ககூடாது என்று சொன்னதால் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.